முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கோச்செங்கட்சோழ நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

05.12.2018, புதன்கிழமை

1. **கருமவினை போக்கி மக்களை**
**காக்கவே அவதாரம் புரிந்த**
**ஆறுமுக அரங்கமகா ஞானியே**
**அகிலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி தேளின் திங்கள்**
**தெரியவே மூவாறோர் திகதி புந்திவாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 19ம் நாள் 05.12.2018, புதன்கிழமை)**
**தேசிகனுக்கு கோச்செங்கட்சோழ நாயனார் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வு பெற வேண்டி மக்களை
ஞானதேசிகனார் ஞானிகள் பூசை
நாடெங்கும் செய்திட தொண்டர்கள் ஆக்கி
4. ஆக்கியே ஆறுமுகனார் வழிபாட்டை
அகிலமெங்கும் பரப்பி வர
ஊக்கமுடன் கலிகால மக்களே
உடன் அரங்க ஞானி கொள்கை ஏற்று
5. ஏற்றுமே முழு சரணடைவு கொண்டு
எல்லா மக்களும் தொடரவே
ஆற்றல் கூட்டும் ஞானதேசிகன்
அருளமுதை உண்டு வருவதுடன்
6. வருவதுடன் அரங்கனின் தருமம்
வற்றா வளர வகை செய்து
ஆறுமுகனார் அருளாசி பெற
அரங்கமகான் உண்மை சீடர்களாகி
7. ஆகியே செபதப வழிமுறைகளுடன்
அறமதை தொடர்ந்து செய்ய
அகிலமதே தருமபலம் பெருகி
அரங்கன் வாழும் ஞானயுகம் ஆகும்
8. ஆகுமே அரங்கன் ஆளுமைக்கான
ஆற்றல்மிக்க ஞானயுகமாகும்
வகைபட தேசநலன் கருதாது
வல்லமையென தீதான ஆளுமை

9. ஆளுமை தொடர்ந்தால் உலகினில்
ஆறுமுகன் வெளிப்பாடாகி
வலுவான தலைமை உருவாகும்
வள்ளல் தன்மையை கொண்ட

10. கொண்ட நல் மக்களே பதவிக்கு
குடிலுக்குள் அனுமதி பெற்றவர்களே
தொண்டுள்ளம் மிக்க மக்களே
துறைவாரியாக தேர்வு கண்டு

11. கண்டுமே ஆளுமை பெறுவர்
கலியுகம் தன் இடர்கள் விலகி
உண்டாகும் அமைதியும் பாதுகாப்பும்
உயர் ஞான ஆட்சி பலம் பெறும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் கோச்செங்கட்சோழ நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலகினில் உள்ள மக்களின் முன்ஜென்ம பாவங்களான கர்மவினைகளை போக்கி காத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே ஞானயோகியே அற்புதம்மிக்க உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 19ம் நாள் 05.12.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே கோச்செங்கட்கோழ நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கோச்செங்கட்சோழ நாயனார்.

மக்களெல்லாம் கர்மவினைகள் நீங்கி நலம் பெற்று உயர்வான நல்வாழ்வை பெற்றிட உலகம் மாயையினின்று விடுபட்டு நல்லுலகமாக அமைதியான ஞானஉலகமாக ஆகிட வேண்டி மக்களை தாயன்போடு அழைத்து முற்றுப்பெற்ற முனிவர்களான ஞானிகளின் திருவடிகளைப் பற்றி பூஜை செய்து ஜென்மத்தினை கடைத்தேறிட அழைப்பு விடுத்து அற்புதமான ஞானபூஜைகளை நாடெங்கும் செய்திட மக்களை அழைத்து அவர்களை தொண்டர்களாக ஆக்கி உலகமெங்கும் இந்த சிறப்புமிக்க பூஜைகள் பரவிட ஞானிகள் தலைவன் முருகப்பெருமானின் வழிபாட்டினை உலகினில் பரப்பி வருகின்றார்.

கலிகால துன்பத்தினில் வாடுகின்ற மக்களே நீங்களெல்லாம் கலியுகத் துன்பத்தினின்று விடுபட ஊக்கமுடன் உடன் விரைந்து உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அற்புதமான ஞானக் கொள்கைகளை ஏற்று மகா ஞானகுரு ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பொன்னார் திருவடிகளே கதியென பயபக்தி பணிவுடன் முழுச்சரணாகதியினை அடைந்து அரங்கனை பின் தொடருங்கள்.

ஆறுமுக அரங்கன் திருவடி பணிந்து ஆற்றல் கூட்டும் உணவாகிய ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலில் ஞானிகளை பூஜித்து அருளமுதாய் படைக்கும் ஞானதேசிகன் அரங்கன் அளிக்கின்ற அருள் உணவினை உண்டு வாருங்கள்.

அரங்கனின் அருளமுதை உண்டு வருவதுடன் அரங்கமகா தேசிகனாரின் தருமம் வற்றாமல் பெருகிடும் வகையிலே அரங்கனின் தருமங்களுக்கு பொருளுதவிகளைச் செய்தும் தொண்டுகளைச் செய்தும் முருகப்பெருமானின் அருளாசிகளை பெற்றிடவே அவரவரும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் உண்மை சீடர்களாக ஆகி நாள்தோறும் மறவாமல் ஜெபதப வழிமுறைகளை செய்வதுடன் தானதருமங்களை தொடர்ந்து செய்து வாருங்கள்.

இவ்விதமே அரங்கனுக்கு சீடர்களாகி ஜெபதபங்களை தவறாமல் செய்து தானதருமங்களை செய்து வரவர, உலகத்தின் மொத்த தருமபலமே பெருகி இந்த கலியுகமே அரங்கமகா தேசிகனார் ஆட்சி செய்து வாழ்கின்ற ஞானயுகமாக ஆகிடும்.

தருமத்தின் பாதையில் செல்லாமல், தேசநலன் கருதாமல் வல்லமையாக இருக்கின்றோம், நாம் சக்திமிக்கோர் என தம்மை வியந்து ஆட்சி புரிவோர்கள் தமது திறமையையும் அறிவையும் நம்பி தர்மத்தை புறக்கணித்து தீமை விளைவிக்கும் மக்கள் நலன் கருதா ஆட்சியை தொடர்ந்து செய்திட்டால் உலகினில் நீதியின் தலைவன் முருகப்பெருமான் வெளிப்பட்டு தீமைமிக்க தலைமைகள் விலக்கப்பட்டு தர்மத்தின் சக்திமிக்க வலுவான தலைமை உருவாகிடும்.

ஆதலினால் இனிவரும் காலமெல்லாம் ஆறுமுகனார் காலம் என்பதினாலே உலகினில் தர்மத்தின் தலைமையில் வலுவான தலைமை உருவாகி வள்ளல் தன்மை கொண்ட மக்களே அரசின் பதவிகளுக்கு வருவர். ஏழாம் படை வீடு ஓங்காரக்குடிலின் அனுமதி பெற்றவர்களே, தொண்டுள்ளம்மிக்க மக்களே துறைவாரியாக தேர்வுகள் செய்யப்பட்டு ஆட்சி பொறுப்புகளில் அமர்வார்கள்.

தர்மத்தின் தலைவன் அரங்கமகா ஞானியர் தலைமையில் ஆறுமுகனார் ஆட்சியில் இந்த கலியுகமும் வலுவிழந்து கலியுகத் துன்பம் எல்லாம் உலகினின்று விலகி அமைதியும் அருள்பாதுகாப்பும்மிக்க உயர் ஞான ஆட்சி உலகினில் வலுவாக உருவாகி பலமுள்ள ஆட்சியாக அது மேலும் மேலும் வளர்ந்து வலுப்பெற்று உலகமெங்கும் பரவி மக்களைக் காக்கும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கோச்செங்கட்சோழ நாயனார்.

—சுபம்—